தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 23.06.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2024 – 25 ம் ஆண்டிற்கான முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பு சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வுகள் நடைபெற்றது**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம் 11 தொகுப்பு கல்லூரிகளில் 33 முதுகலை மற்றும் 28 முனைவர் பட்டப் படிப்பை வழங்குகிறது. துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் மே 7, 2024 அன்று வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வனவியல் மற்றும் சமூக அறிவியல் சேர்க்கைக்கான இணையதளத்தினை தொடங்கினார்.

இந்த ஆண்டு முதுநிலைப் படிப்புகளுக்கு மொத்தம் 2330 விண்ணப்பதாரர்களும், முனைவர் பட்டப் படிப்புகளுக்கு 380 மாணவர்களும் தங்களின் பாட விருப்பத்தின்படி பல்வேறு திட்டங்களுக்கு விண்ணப்பித்து 23 ஜுன் 2024 அன்று நடைபெற்ற முதுகலை நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டனர். இந்த நுழைவுத் தேர்வில் ஆந்திரப் பிரதேசம், கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, ஒடிசா, மேற்கு வங்கம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், குஜராத், ஜார்கண்ட், இமாச்சல பிரதேசம், மேகாலயா, அசாம், தெலுங்கானா, புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர். இந்த தேர்வு பல்கலைக்கழகத்தின் 33 தேர்வு அரங்குகள் மற்றும் விரிவுரை அரங்குகளில் 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் 50 நிர்வாக பணியாளர்கள் மூலம் நடத்தப்பட்டது. தேர்வு நடைபெறும் பல்வேறு அரங்குகளைக் கண்டறிய கூகுள் வரைபடத்துடன் இணைக்கப்பட்ட QR குறியீடுகள், உருவாக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது, பெற்றோர்கள் மற்றும் தேர்வர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் என்.செந்தில், முதன்மையர் (வேளாண்மை) முனைவர் என்.வெங்கடேச பழனிச்சாமி, முதன்மையர் (வேளாண் பொறியியல்) முனைவர் ஏ.ரவிராஜ் ஆகியோர் முன்னிலையில் தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களை சந்தித்து வாழ்த்தினார். முதுகலை பட்ட மேற்படிப்பு சேர்க்கை குழு தலைவர் முனைவர் என்.செந்தில் அவர்கள் தேர்வுகள் சுமூகமாக நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார் முதுகலை பட்டப்படிப்பு பள்ளியின் பணியாளர்கள், தேர்வுக்கு முந்தைய நாளிலும் மற்றும் தேர்வு நாளிலும், பெற்றோர்கள் மற்றும் தேர்வில் பங்கேற்கும் அனைத்து மாநில மாணவர்களுக்கு தேவையான விரிவான ஏற்பாடுகளை செய்யப்பட்டிருந்தது. மேற்கண்ட தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கான சேர்க்கை வரும் செப்டம்பர் 2024 இல் நடைபெற உள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**